மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இப்படிப்பட்ட அரிஷ்டத்தைப்பற்றிய பிரச்சினையல்ல இது. அதுபற்றி விவரமாக அறிவிக்க வேண்டுமென்றால் தனிக்கேள்வி போடலாம். இப்பொழுது இருக்கும் நிலையில் அரிஷ்டத்தைத் தடுக்கவோ, குறைப்பதற்கோ அல்லது அதனால் கெடுதல் ஏற்படாமல் பார்ப்பதற்கோ சட்டம் எந்த அளவுக்கு இடம் கொடுக்கிறது என்று அரசு ஆராய்கிறது.

* 348 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have recently prohibited the sale of denatured spirit even to registered medical practitioners; and

(*b*) if so, when the ban on the sale of spirit will be lifted?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இயல்பு மாற்றப்பட்ட சாராயம், வார்னிஷ் இவைகளின் விற்பனை முழுமையாக தடை செய்யப்பட்டதனாலும் வார்னிஷ், சாராய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கடைகள் மூடி முத்திரையிடப்பட்டதாலும் மருத்துவர்களுக்கும் இச் சாராயம் கிடைக்கவில்லை.

(ஆ) இந்த வகைச் சாராய விற்பனை மீது விதிக்கப்பட்டிருந்த தடை 1967-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 5-ந் தேதி முதல் நீக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. விநயகம் : சார், சமீபத்தில் ஏற்பட்ட இந்த விபத்தின் காரணமாக, இந்த ஸ்பிரிட் எல்லாம் அவர்கள் குடித்து, இறந்ததால், ஸ்பிரிட் எந்தவிதமான வியாபாரத்திற்கும் பயன்படுத்தக்கூடாது என்று பொதுவாக ஒரு விதி போட்டதனால் மருத்துவர்களுக்கு—இன்ஜெக்ஷன் போட ஸ்பிரிட் அத்தியாவசியமாக இருக்கிறது—ஸ்பிரிட் கிடைக்காமல் இருந்தது. அந்த ட்யூரேஷனில் பல நோயாளிகள் இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள முடியாமல், எத்தனையோ பேர் இறந்து போனதாகச் சொல்லப்படுகிறதே, அந்த இறந்துபோனவர்களின் எண்ணிக்கை முதல் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 'இறந்து போனதாகச் சொல்லப்படுகிறது' என்று கனம் உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கேகூட யாரோ சொல்லியிருக்கிறார்கள். அவர்களை விசாரித்தால் எண்ணிக்கையைச் சொல்லுவார்கள். ஆனால் இதில் ஒரு பரபரப்பு ஏற்பட்டபோது, அதைத் தடுப்பதற்கு இந்த முறை கையாளப்பட்டது. அதிலே ஏற்படக்கூடிய சிக்கல்கள் அறிவிக்கப்பட்டதும் அந்தத் தடை நீக்கப்பட்டது.

DR. H. V. HANDE : Sir, I am also a Registered Medical Practitioner using spirit for giving injections. Does the Hon. Chief Minister know that that difficulty was there for only a few days and that crisis was over? Now-a-days we are getting spirit for giving injections without any difficulty. Even if there is no spirit available, we can use tincture or iodine or even dettol. There are so many other alternatives.

1968 மார்ச் 28]

(No reply).

THIRU K. VINAYAKAM : Is the Hon. Chief Minister aware of the fact that by not using spirit but using another substance called tincture or iodine has the hon. Member who himself is a medical practitioner got liberty to kill patients in such a way?

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. This is a very damaging statement on all the doctors who are using iodine when they do not get spirit. As the main consideration for the doctors is to protect patients, I would request the hon. Member not to make a damaging statement on our entire tribe of doctors.

திரு. நா. காசிராமன் : இயல்பு மாற்றப்பட்ட ஸ்பிரிட்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் முன்பு சொன்னபோது "இயல்பு மாற்றப்பட்ட சரக்கு வெளிநாட்டில் இருந்து வந்தது" என்று சொன்னார்கள். மற்றொரு பொருள் கிடைக்காததன் காரணமாக கடோசின் உபயோகப்படுத்தப்பட்டது. இயல்பு மாற்றப்பட்ட ஸ்பிரிட்களை விற்கும்போதோ அல்லது ஸ்பிரிட்டினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்கும்போதோ கண்ணுக்கு நன்றாகப் புலப்படும் வண்ணம் 'ஸ்கல் அண்ட் போன்' படத்தைப் போட்டு, 'இது விஷம், அருந்தினால் மரணம் சம்பவிக்கும்' என்ற குறிப்பை எழுதித்தான் விற்கவேண்டும் என்று விற்பனை செய்பவர்களுக்கு அறிவிக்கப்படுமா? அவ்வாறு செய்ய விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இரண்டு பொருள்களும் விஷப்பொருள் அல்லவென்று இருப்பதால் அதற்குப் போட முடியாது. ஆனால் மெதில், ஆல்கஹால் இவைகளை விற்கிற போது 'ஸ்கல் அண்ட் போன்' படம் போடலாம்.

Obscene Models

* 349 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon the Chief Minister be pleased to state the steps taken by the Government to prohibit exhibition of obscene models in tailoring shops etc., in the State and particularly in Madras city?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சென்னை மாநகரத்திலோ அல்லது இம்மாநிலத்தின் பிற இடங்களிலோ ஆபாசமான மாதிரி உருவங்கள் **(Model)** தையற் கடைகளில் வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் நாட்டத்திற்கு வரவில்லையாதலால் இவ்வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : தலைவரவர்களே, இம்மாதிரி ஆபாச விளம்பர மாடல்கள் தொங்கவிடப்படுவதால் பெண்களுக்கு அவமரியாதை செய்வதோடு பால் உணர்ச்சியை ஊட்டுவதாகவும் இருக்கிறது. ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுத்து, இம்மாதிரி ஆபாசமான மாடல்கள் போட்டு விளம்பரம் செய்யப்படாமல் இருக்க அதைத் தடை செய்ய அரசாங்கம் முன்வருமா?